# தருமபுரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி, தருமபுரி

**நக எண்** 27/2011/ Com. **நாள்** 06.01.2014

## சுற்றறிக்கை

**பொருள் :** (CBS) மைய வங்கியில் தீர்வு திட்டம் - KYC படிவத்தின் புகைப்படம் மற்றும் கையொப்பங்களின் நிழற்படங்கள் மென்பொருளில் பதிவேற்றம் மேற்கொண்டது - மாதாந்திர அறிக்கை அனுப்ப கோருதல் - தொடர்பாக.

~~~~~~~~~~~

KYC படிவத்தில் உள்ளடக்கிய புகைப்படம் (Photo) மற்றும் கையொப்பம் (Signature) இரண்டையும் Scan செய்து CBS மென்பொருள் மூலம் சம்மந்தப்பட்ட கணக்கிற்கு உடனுக்குடன் பதிவேற்றம் மேற்கொண்டு செயல்பட அனைத்து கிளை மேலாளர்களுக்கும் சுற்றறிக்கை மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இருப்பினும் இப்பணியில் மெத்தனமாக செயல்பட்டு வருவது வங்கியின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. RBI வங்கியின் KYC ஆய்வும் மற்றும் NABARD வங்கியின் வருடாந்திர ஆய்வும், விரைவில் வங்கியில் மேற்கொள்ள இருப்பதை கருத்தில் கொண்டு, இப்பணியை மிக முக்கிய பணியாக கருதி பதிவேற்றும் பணியை 28.02.2014க்குள் நிலுவையினை நிறைவு செய்து வங்கிக்கு அறிக்கை அனுப்ப அறிவுறுத்தப்படுகிறது. தவறும் கிளை மேலாளர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

இப்பணியை தொடர்ந்து நிலுவையின்றி செயல்படுத்திடவும் தினசரி வங்கியில் மேற்கொள்ளப்படும் பரிவர்த்தனைகளை கண்காணித்து செயல்படும் பொருட்டு கீழ்கண்ட அறிக்கைகள் தினசரி நகல் எடுத்து கணக்குகள் சரிபார்த்து செயல்பட அறிவுறுத்தப்படுகிறது. மற்றும் விடுப்பில் செல்லும் தலைமையக வங்கிப்பிரிவு மேலாளர் /கிளை மேலாளர்கள் விடுப்பில் சென்ற தேதியின் அனைத்து பரிவர்தனைகள் இவ்வறிக்கை மூலம் சரிபார்த்தும் மற்றும் கண்காணித்தும் உறுதி செய்து செயல்பட வேண்டும்.

1. Voucher Verification Report (VVR – 013)
2. IBT Report (Inter Branch Transaction Report – 0004)
3. Daily Correction transaction Report.
4. Back dated account opening report (063)

இது தொடர்பாக மாதாந்திர அறிக்கையை மாதந்தோறும் சமர்ப்பிக்க பணிக்கப்படுகிறார்கள்.

CBS செயல்திட்டத்தில் வங்கி நிதி பாதுகாப்பு மற்றும் பரிவர்த்தனைகள் கண்காணிப்பதை மேம்படுத்தும் பொருட்டு மாதாந்திர VVR Report மாற்றம் செய்யப்பட்டுள்ளது. எனவே இணைக்கப்பட்டுள்ள படிவம் மூலம் மாதாந்திர அறிக்கையை 3ம் தேதிக்குள் வங்கியின் கணினி பிரிவில் சமர்ப்பிக்க அறிவுறுத்தப்படுகிறது.

ஒம்/. ஜெ. ஆனந்தி
இணைப்பதிவாளர் /மேலாண்மை இயக்குநர்,

**இணைப்பு** - மாதாந்திர முன்னேற்ற அறிக்கை படிவம் - 1.

**பெறுதல்,**

1. அனைத்து கிளை மேலாளர்கள் / தலைமையக வங்கி பிரிவு மேலாளர்கள்.
2. தலைமையக அனைத்து பிரிவு மேலாளர்கள் மற்றும் அனைத்து பணியாளர்கள்.

நகல்,

இணைப்பதிவாளர் / மேலாண்மை இயக்குநர், முதன்மை வருவாய் அலுவலர், பொதுமேலாளர் ஆகியோர்களின் மேசைக்கு.

/உண்மை நகல் / மேலாளர் (கணினி)
6/1/14.
~~~~~~~~~~~